بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

இதழ் 19

தொகுதி 6

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

30 ரமலான் 1442 ஹிஜ்ரி கமரி 13 ஹிஜ்ரத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 13 மே 2021


## அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ
شُهَدَآءَ بِالْقِسْطِ ۫ وَلَا يَجْرِمَنَّكُمْ
شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۟
هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۫ وَاتَّقُوا

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது தான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. (5:9)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஒழுக்கங்களை சீர்செய்வதற்கு எல்லா நிலையிலும் எல்லா நேரமும் மனிதனின் கண்காணிப்பாளனாக இருக்கின்ற மேலும் மனிதனது செயல்கள் மற்றும் அவனது நெஞ்சத்தின் இரகசியங்களின் சாட்சியாளனாக இருக்கின்ற இறைவனின் மீது நம்பிக்கை இருப்பது அவசியமாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### காலத்தின் தேவை

மக்கள் உண்மையான கொள்கையிலிருந்து எவ்வாறு விலகியிருக்கின்றனர் என்று இன்றைய நாட்களில் பார்க்க வேண்டும். 20 இலட்சம் புத்தங்கள் இஸ்லாத்திற்கெதிராக வெளியாகியுள்ளன. மேலும் பல இலட்சம் நபர்கள் கிறிஸ்த்துவர்களாகி விட்டனர். ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு எல்லை உள்ளது. வறட்சி காலத்திற்குப் பிறகு விலங்குகள் கூட மழை வேண்டி நம்பிக்கையுடன் வானத்தை பார்க்கின்றன. 1300 ஆண்டு கால ஒளி மற்றும் மழை தடைபட்ட பிறகு இன்று விண்ணிலிருந்து மழை இறங்கியுள்ளது. இனி இதனை எவரும் தடுக்க முடியாது. மழைக்காலம் வந்து விட்ட பிறகு அதனை நிறுத்தக் கூடியவர் எவர் இருக்கின்றார்? இது எப்படிப்பட்ட காலம் என்றால் மக்களின் உள்ளம் உண்மையிலிருந்து வெகு தூரம் விலகியுள்ளது. எந்த அளவுக்கென்றால் அவர்களுக்கு இறைவன் மீதே சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

### அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையின் முக்கியத்துவம்

ஈமானின் மூலமாக மட்டுமே அனைத்து (நற்)செயல்களும் வெளிப்படுகின்றன. உதாரணமாக, எலிக்கான விஷத்தை ஒருவர் சாக்பீஸ் என்று புரிந்து கொண்டால் எந்த அச்சமும், பயமுமின்றி அதனை உண்டு விடக்கூடும். ஆனால் அது விஷம் என்று நம்பிக்கை கொண்டிருந்தால் அதனை (மனிதன்) ஒருபோதும் வாய்க்கு அருகில் கூட கொண்டு செல்ல மாட்டான். இறை இருப்பின் மீது நம்பிக்கை கொள்வது உண்மையான நன்மையை மேற்கொள்ள அவசியமாகும். ஏனென்றால் ஒருவர் வீட்டுற்குள் என்ன செய்கின்றார் என்பதும், திரைமறைவில் எவருடைய செயல் என்னவாக உள்ளது என்பதையும் அதிகாரிகள் அறிவதில்லை. ஒருவர் நாவினால் நன்மையை ஒப்புக் கொண்டபோதிலும் அவரது உள்ளத்தில் என்ன எண்ணம் கொண்டுள்ளார் என்பதை (உலகம்) அறிவதில்லை. நாம் கேள்வி கேட்கப்படுவோம் என்ற அச்சம் அவரது உள்ளத்தில் இல்லாமல் போகலாம்.

இரவிலும், பகலிலும், இருளிலும், ஒளியிலும், தனிமையிலும், மக்கள் மத்தியிலும், வனாந்தரத்திலும், நகரத்திலும், வீட்டிலும், கடை வீதியிலும் எல்லா நிலையிலும் அச்சத்தின் ஒரே நிலையில் மனிதனை வைப்பதற்கு உலக அரசாங்கங்களிடம் எதுவும் இல்லை. ஒழுக்கங்களை சீர்செய்வதற்கு எல்லா நிலையிலும் எல்லா நேரமும் மனிதனின் கண்காணிப்பாளனாக இருக்கின்ற மேலும் மனிதனது செயல்கள் மற்றும் அவனது நெஞ்சத்தின் இரகசியங்களின் சாட்சியாளனாக இருக்கின்ற இறைவனின் மீது நம்பிக்கை இருப்பது அவசியமாகும். ஏனென்றால் எவரது அகமும், புறமும் ஒன்றாக இருக்குமோ, எவர் உள்ளத்திலும் வெளியிலும் ஒன்றுபோல் இருப்பாரோ அவரே நல்லவர் ஆவார். அத்தகைய நபர் பூமியில் வானவரைப் போன்று நடக்கின்றார். நாத்தீகர்கள் நல்லொழுக்கங்களை பெறக்கூடிய அரசாங்கத்தின் கீழ் இல்லை. ஈமான் மூலமாகவே அனைத்து விளைவுகளும் வெளிப்படுகின்றன. எனவே பாம்பின் புற்றை அடையாளம் கண்ட பிறகும் ஒருவர் அதில் விரல்களை நுழைக்க மாட்டார்.

சிறிதளவு ஆர்சனிக் (விஷம்) உயிரை பறிக்கும் என்று நாம் அறிந்திருந்தால், அது கொன்று விடும் என்று நாம் நம்பிக்கை கொண்டிருந்தால் அந்த நம்பிக்கையின் விளைவாக நாம் அதனை வாயிலும் வைக்க மாட்டோம். மேலும் மரணத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வோம். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 288 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

---

### நோன்பின் நிலையில் Corona தடுப்பூசி போடுவது தொடர்பான வழிகாட்டல்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்கள் கூறுகிறார்கள்:

Corona தடுப்பூசி போடுவதற்கு ரமலானில் ஓர் அஹ்மதிக்கு Appointment கிடைக்குமென்றால் இஸ்லாம் வழங்கிய சலுகையிலிருந்து பயன் பெற்றவாறு தடுப்பூசி போடும் நாளன்று அவர் நோன்பு நோற்க வேண்டாம். ரமலானிற்கு பிறகு அவர் அந்த நோன்பை பூர்த்தி செய்து கொள்ளட்டும். (அல் ஃபஸல் இன்டர்நேஷனல் ஏப்ரல் 16, 2021)

......☆......☆......☆......


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 ஏப்ரல் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **09 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு என்ன அந்தஸ்து இருந்தது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும், அதற்குப் பிறகும் சஹாபிகள் எவ்வாறு பார்த்தார்கள் என்பதைக் குறித்து அறிவிப்புகள் உள்ளன.

நாஃபி அவர்கள் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நாங்கள் எங்களுக்குள் ஒருவரை விட இன்னொருவரை சிறப்பானவராக கருதி வந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைவரையும் விட சிறந்தவர் என்று கருதினேன். அதன் பிறகு, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் (ஆவார்கள்). பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் ஆவார்கள். இது புகாரியுடைய அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் பஸ்ல் அபீபக்ர் பஃதுன் நபி (ஸல்), ஹதீஸ் எண் 3655)

புகாரியுடைய இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. நாஃபி அவர்கள் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இணையாக எவரையும் நாங்கள் கருதவில்லை. பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இணையாக எவரையும் கருதவில்லை. பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இணையாக எவரையும் கருதவில்லை. அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளுள் ஒருவரை விட இன்னொருவரை சிறந்தவராக எவரையும் நாங்கள் கருதவில்லை.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உஸ்மான்...... ஹதீஸ் எண் 3697)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சிறந்தவர்களுள் ஒருவராக கருதப்பட்டது குறித்து அறிவிப்புகளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

முஹம்மது பின் ஹன்பிஃபா அவர்களுடைய அறிப்பாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது தந்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மக்கள் அனைவரிலும் மிகச் சிறந்தவர் யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) என்று கூறினார்கள். அவருக்குப் பிறகு யார்? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள். பிறகு யார்? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள். எனது தந்தையே! அவருக்குப் பிறகு தாங்களா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், நான் முஸ்லிம்களில் ஒரு சாதாரண நபராவேன் என்று கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா பாப் ஃபித்தஃப்ஸீல் ஹதீஸ் எண் 4629)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் இருந்த தொடர்பு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்து ஆகியவற்றை இந்த சம்பவத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் பகைமை கொண்டிருந்த ஒருவரின் ஜனாஸா தொழுகையை அன்னார் (ஸல்) அவர்கள் தொழ வைக்கவில்லை. அதன் விவரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் ஜாபிர் அறிவிக்கிறார்கள்: (ஒருமுறை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒருவருடைய ஜனாஸா கொண்டு வரப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ வைக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ வைக்கவில்லை. அப்போது ஒருவர், யா ரஸூலல்லாஹ்! இதற்கு முன் நீங்கள் ஒருவருடைய ஜனாஸா தொழுகையை விட்டதாக நாங்கள் கண்டதில்லையே! என்றார். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த நபர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் பகைமை கொண்டிருந்தார். ஆகவே அல்லாஹ்வும் இவருடன் பகைமை கொண்டுள்ளான்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப் ஃபீ மனாகிப் உஸ்மான்............. ஹதீஸ் எண் 3709)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து, அன்னாரின் நீதியையைக் குறித்து அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளன. தமது சகோதரரின் குற்றம் நிரூபிக்கப்பட்டபோது எவ்வாறு அவருக்கு தண்டனை வழங்கினார்கள் என்று அதில் வருகிறது.

உபைதுல்லாஹ் பின் அதீ அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் மிஸ்வர் பின் மக்ரமா மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃஸவத் பின் அப்தே யவூஸ் ஆகிய இருவரும் என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், அவர்களின் சகோதரர் வலீத் குறித்து பேசுவதற்கு உங்களை எது தடுக்கிறது? ஏனென்றால் மக்கள் அவரைக் குறித்து சில தவறான விஷயங்களின் காரணமாக அதிகமாக விவாதிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்று கூறினார்கள்.

ஆகவே நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்றேன். அப்போது அன்னார் தொழுகைக்காக வெளியே வந்தார்கள். உங்களிடம் வேலை ஒன்று உள்ளது என நான் கூறினேன். அது உங்களின் நலன் விரும்பி செய்யப்படுகிறது என்றேன். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், உங்களிடம் முஅம்மர் கூறினாரா? அவர் கூறியிருப்பார் என நான் கருதுகிறேன். அவருடைய தூதுச் செய்தியை நீங்கள் கொண்டு வந்துள்ளீர்கள் என நினைக்கிறேன்

என்றார்கள். அதன் பிறகு உம்மிடமிருந்து அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சென்ற அந்நபர் இதைக் கேட்டு விட்டு அந்த மக்களிடம் திரும்பினார். அந்த இடைப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தூதுவர் வந்தார். நான் அன்னாரிடம் சென்றேன். நீங்கள் நலம் விரும்பியது என்ன? என்று அன்னார் வினவினார்கள். நான் உங்களின் நலம் நாடுகிறேன் என்று அவர் கூறினாரே என்று கேட்டார். அதற்கு நான், தூய்மையான அல்லாஹ், முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பியுள்ளான். மேலும் அன்னாரின் மீது வேதத்தை இறக்கியுள்ளான். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுள் நீங்கள் ஒருவராவீர்கள். மேலும் தாங்கள் இரண்டு ஹிஜ்ரத்துகள் செய்துள்ளீர்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஒத்துழைத்துள்ளீர்கள். மேலும் தாங்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் நடைமுறையை கண்டுள்ளீர்கள் என்று கூறினேன். அதன் பிறகு நான், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சகோதரனான வலீதைக் குறித்து மக்கள் நிறைய பேசி விட்டார்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்னிடம், நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தைப் பெற்றீர்களா? என கேட்டார்கள். அதற்கு நான், இல்லை! ஆனால் தங்களின் ஞானத்தின் காரணமாக அவ்விஷயங்கள் எனக்கு வந்தடைந்தன. நான் அக்காலத்தை அடையவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்து விஷயங்கள் எனக்கு கிடைக்கப் பெற்றன. ஒரு கன்னிப் பெண்ணுக்கு திரைக்குப்பின்னால் கிடைக்கும் விஷயங்களும் கூட எனக்கு கிடைக்கப் பெற்றன என்று கூறினேன்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பியுள்ளான். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுள் நானும் ஒருவனாவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். மேலும் அன்னார் கொண்டுள்ள அனைத்து விஷயங்களின் மீதும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். மேலும் நீங்கள் கூறியதுபோன்று, நான் இரண்டு ஹிஜ்ரத்தும் செய்துள்ளேன். மேலும் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளேன். அன்னாரிடம் பைஅத் செய்துள்ளேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அன்னாருக்கு கட்டுப்படாமல் இருந்ததில்லை. அன்னாரை ஏமாற்றியதுமில்லை. எதுவரை என்றால், அல்லாஹ் அன்னாருக்கு மரணத்தை வழங்கினான்.

அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அதுபோன்ற பின்பற்றத் தகுந்தவராக இருந்தார்கள். அவ்வாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பின்பற்றத் தகுந்தவராக இருந்தார்கள். அவர்களுக்கும் நான் கட்டுப்பட்டேன். பிறகு நான் கலீஃபாவாக ஆக்கப்பட்டேன். எனக்கு முன்பிருந்த இரண்டு கலீஃபாக்களுக்கு இருந்த அதே உரிமை எனக்கு இல்லையா என்ன? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஏன் இல்லை? அவ்வாறென்றால் உம் சார்பாக எனக்கு வந்தடைகின்ற விஷயங்கள்தான் என்ன? என்று கேட்டார்கள். வலீது விவகாரம் குறித்து நீங்கள் கூறினீர்கள். இன்ஷா அல்லாஹ்! நாம் அவருக்கு குற்றத்திற்றான உரிய தண்டனையை கொடுப்போம் என்றார்கள். அவர் குறித்து கூறப்படுகின்ற குற்றத்திற்கான தண்டனையை நாம் கொடுப்போம் என்றார்கள். அதன் பிறகு அன்னார் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்தார்கள். அவருக்கு சவுக்கடி கொடுக்குமாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஆகவே அவர்கள் அவருக்கு 80 சவுக்கடிகள் கொடுத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உஸ்மான்...... ஹதீஸ் எண் 3696)

ஹஸ்ரத் செய்யது ஜைனுத்தீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் இதன் விளக்க உரையில் கூறுகிறார்கள்: புகாரியுடைய அறிவிப்பாகும். வலீத் பின் உக்பா அவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்பட்ட சம்பவத்தில் அவர் மது அருந்தியதாக குற்றம் சாட்டப்பட்டார் என்று வருகிறது. அது அறியாமைக் கால மதுவாகவே இருந்தது என்று சாட்சியங்களால் உறுதிப்படுத்தப்பட்டது. அது தூய்மையாக்கப்பட்ட பானமாகவோ அல்லது பேரீத்தம் பழ சாப்பத்தாகவோ இருக்கவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நெருங்கிய உறவு முறையை கருத்தில் கொள்ளவில்லை. மாறாக நெருங்கிய உறவின் காரணமாக அவருக்கு இரு மடங்கு தண்டனை வழங்கினார்கள். 40 கசை அடிகளுக்கு பகரமாக 80 கசையடிகளை அடிக்கச் செய்தார்கள் இந்த எண்ணிக்கை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நடைமுறையிலிருந்தும் நிரூமணமாகின்றது.

(புகாரியின் உருது மொழியாக்கம் தொகுதி 7 பக்கம் 192 – ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

பிறகு ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஹம்ரான் என்பவர் கூறியதாக அதா பின் யஸீது என்பவர் கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்கள் இவ்வாறு செய்வதை அவர் கண்டார். அதாவது அன்னார் ஒரு பாத்திரத்தை கொண்ட வரச் செய்தார்கள். தண்ணீரைக் கொண்டு தமது இரண்டு கைகளையும் கழுவினார்கள். பிறகு தமது வலக்கரத்தை பாத்திரத்தில் இட்டார்கள். மேலும் வாய் கொப்பளித்தார்கள். பிறகு மூக்கை சுத்தம் செய்தார்கள். அதன் பிறகு முகத்தையும், முழங்கை வரை இரண்டு கைகளையும் மூன்று முறை கழுவினார்கள். பிறகு தமது தலையை கைகளால் தடவினார்கள். பிறகு தமது இரண்டு கால்களையும் கணுக்கால் வரை மூன்று முறை கழுவினார்கள்.

பிறகு கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவர் எனது இந்த வுளூவைப் போன்று வுளூ செய்வாரோ மேலும் தனது நஃப்ஸுடன் உரையாடாமல் இவ்வாறு இரண்டு ரக்அத்கள் தொழுவாரோ அதற்கு முன்பு செய்த அவரது அனைத்து பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் வுளூ.... ஹதீஸ் எண் 159)

ஜுமுஆ நாளன்று இரண்டாவது பாங்கு சேர்க்கப்பட்டது. ஹஸ்ரத் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்தது. அதாவது முதல் பாங்கு கூறப்பட்டது குறித்து அதன் விளக்கம் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.

ஸுஹ்ரி அவர்கள் சாயிப் பின் யஸீத் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் காலத்தில் இமாம் சொற்பொழிவு மேடையில் அமரும்போது முதல் பாங்கு கூறப்படும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலம் வந்தபோது, மக்கள் அதிகரித்தபோது ஸுஹ்ராவில் மூன்றாவது பாங்கை அன்னார் இணைத்தார்கள்.

அபூ அப்தில்லாஹ் கூறுகிறார்கள்: ஸுஸ்ரா என்பது மதீனாவின் கடை வீதியில் உள்ள ஓர் இடமாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜுமுஆ, பாப் அஸான் யவ்முல் ஜுமுஆ ஹதீஸ் எண் 912)

ஃபிக்ஹா அஹ்மதிய்யாவிலும் இந்த ஹதீஸ் குறித்து எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் காலத்தில் ஜுமுஆ நாளில், பள்ளிவாசலுக்குள் வைக்கப்பட்டிருக்கும் சொற்பொழிவு மேடைக்கு அருகில் உறுதியாக ஒரு பாங்கு

கூறப்படும். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் இரண்டாவது பாங்கின் நடைமுறை உண்டாயிற்று. அது, பள்ளிவாசலின் கதவருகில் கிடந்த பாறை மீது நின்று கொடுக்கப்பட்டது. அந்த பாறையின் பெயர் ஸுஹ்ரா ஆகும்.

(ஃபிக்ஹா அஹ்மதிய்யா (இபாதாத்) பக்கம் 122)

சஹீஹ் புகாரியின் விளக்கவுரையான நிஃமத்துல் பாரியி ல் இந்த ஹதீஸின் விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. இப்னு ஷிஹாப் ஸுஹ்ரி என்பவர் சாயிப் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். மூன்றாவது பாங்கு என்பது இகாமத் அடிப்படையில் அந்த ஹதீஸின் பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

(நிஃமத்துல் பாரி ஃபீ ஷரஹ் சஹீஹுல் புகாரி தொகுதி 2 பக்கம் 837 ஹதீஸ் எண் 912 – 2013 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள ரூமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

முதலில் இரண்டு பாங்கு இருந்தது. பிறகு மூன்றாவதும் கூறப்பட்டது என்று வந்துள்ளது. நான் கூறிய முதல் அறிவிப்பில், மக்கள் எண்ணிக்கை அதிகரித்தபோது ஸுஹ்ராவில் மூன்றாவது பாங்கு இணைக்ககப்பட்டது என்று வந்தது. மூன்றாவது பாங்கு என்பது, முதல் பாங்கு, பிறகு இரண்டாவது பாங்கு அதன் பிறகு தக்பீர் கூறப்பட்டது. அதைத்தான் பாங்கு என்று கூறப்பட்டுள்ளது. தொழுகைக்காக இவ்வாறு மூன்று முறை அழைக்கப்பட்டது.

பெருநாளின்போது ஜுமுஆ தொழுகையை விட்டு விடுப்பு வழங்கப்பட்டதைக் குறித்து அறிவிப்பு காணப்படுகிறது.

இப்னு அஸ்ஹர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அபூ உபைத் அவர்கள் கூறுகிறார்கள்: அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பின்னால் ஒரு நாள் ஈதுல் அழ்ஹாவின் நாளில் பெருநாள் தொழுகையை தொழுதார்கள். அன்னார் குத்பாவுக்கு முன்பாக தொழ வைத்தார்கள். பிறகு மக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். மக்களைப் பார்த்து, மக்களே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிச்சயமாக உங்களை இந்த இரண்டு பெருநாள்களில் நோன்பு நோற்பதை தடை செய்துள்ளார்கள். அவற்றில் ஒன்று, நோன்புகளை நோற்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியில் கிடைக்கும் பெருநாள் ஆகும். இரண்டாவது நீங்கள் உங்கள் குர்பானிகளை உண்ணும் நாளாகும்.

அபூ உபைதுத் அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு அவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் அவர்களின் காலத்தில், அன்னாருக்குப் பின்னால் நின்று ஒரு பெருநாள் தொழுகையை தொழுதார்கள். அது ஜுமுஆ நாளாக இருந்தது. அன்னார் குத்பாவுக்கு முன்பு தொழ வைத்தார்கள். பிறகு அன்னார் மக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். மக்களே! இந்த நாளில் உங்களுக்கு இரண்டு பெருநாள் ஒன்று நேர்ந்துள்ளது. ஆகவே மதீனாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் ஜுமுஆவுக்காக காத்திருக்க விரும்பினால் அவர் காத்திருக்கலாம். மேலும் எவர் திரும்பிச் செல்வதை விரும்புகிறாரோ அவர் திரும்பிச் செல்ல என் சார்பாக அனுமதி உள்ளது என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி..... ஹதீஸ் எண் 5571, 5572)

ஃபிக்ஹா அஹ்மதிய்யாவில் ஒரு விஷயம் எழுதப்பட்டுள்ளது. அது குறித்து இதுவரை எனக்கு தெளிவான சான்று கிடைக்கவில்லை. அங்கு எழுதப்பட்டுள்ளதாவது, ஜுமுஆவும் பெருநாளும் ஒரே நாளில் ஒன்று சேர்ந்தால், பெருநாள் தொழுகைக்குப் பிறகு ஜுமுஆவும் தொழ வேண்டியதில்லை. ளுஹரும் தொழ வேண்டியதில்லை. மாறாக அஸர் நேரத்தில் அஸர் தொழுதால் போதுமானது என்று வந்துள்ளது.

அதா பின் ரபாஹ் கூறுகிறார்கள்: ஒரு முறை ஜுமுஆ மற்றும் ஈதுல் ஃபித்ர் ஆகிய இரண்டும் ஒரு நாளில் ஒன்று கூடின. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் யஸீத் அவர்கள் கூறினார்கள்: ஒரு நாளில் இரண்டு பெருநாள்கள் ஒன்று கூடின. அவற்றை ஒரு சேர தொழ வேண்டும் என்றார்கள். ஆகவே அவர்கள் இரண்டிற்கும் இரண்டிரண்டு ரக்அத்களை மதிய வேளைக்கு முன்பு தொழுதார்கள். அதன் பிறகு அஸர் வரை எந்த தொழுகையும் தொழவில்லை. அதாவது அந்நாளில் அஸர் தொழுகை மட்டும் தொழப்பட்டது.

(ஃபிக்ஹா அஹ்மதிய்யா (இபாதாத்) பக்கம் 177)

இது குறித்து இன்னும் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் இதைத்தான் கூறியுள்ளார்கள்.

(குத்பாத்தே தாஹிர் தொகுதி 6 பக்கம் 374 குத்பா ஜுமுஆ 29 மே 1987)

மேலும் ஆய்வை மேற்கொண்டார்கள். ஆய்வு செய்ய அவசியம் இல்லை என்று முதலில் நான் கருதினேன். ளுஹர் தொழுகையையும் விட்டு விட்டதாக எந்தவொரு அறிவிப்பும் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை வரை செல்லவில்லை.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் யஸீத் அவர்களின் இந்த அறிவிப்பு மட்டுமே காணப்படுகிறது. ஆகவே இது குறித்து மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஃபிக்ஹா மறுபடியும் திருத்தப்படுகிறது. என்னைப் பொருத்த வரை இந்த விஷயம் குறித்து மேற்கொண்டு கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ளுஹர் தொழுகையை கூட தொழ வேண்டாம் என்று கூறப்பட்டது எந்த அளவுக்கு சரி? என்று பார்க்க வேண்டும். ஜுமுஆவை தொழ வேண்டாம் என்று கூறியது சரியாக இருக்கலாம். ஆனால் (அன்று) ளுஹரும் தொழ வேண்டாம் என்று கூறுவது எந்த அளவு சரி என்று ஆராய வேண்டும்.

இது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்தோ, அல்லது நேர்வழி பெற்ற கலீஃபாக்களிடமிருந்தோ நேரடியாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் கிடைக்கவில்லை. அல்லது இதுவரை அவை முன்னால் வரவில்லை. நான் ஆய்வு செய்தவரை இந்த ஒரு அறிவிப்பு மட்டுமே உள்ளது.

ஜுமுஆ நாளில் குளிப்பது தொடர்பாக அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் ஜுமுஆ நாளன்று மக்களுக்கு முன் குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்கள் நுழைந்தார்கள். அவரை சுட்டிக்காட்டியவாறு, மக்களுக்கு என்னவாயிற்று! அவர்கள் பாங்குக்குப் பிறகும் கூட தாமதமாக வருகிறார்களே என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைக்கேட்ட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அமீருல் மூமினீன் அவர்களே! பாங்கு ஓசை கேட்ட உடனேயே நான் உளூ செய்து விட்டு வந்து விட்டேன் என்றார்கள். உளூ மட்டும் தானா? என்று கேட்டவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உங்களுள் ஒருவர் ஜுமுஆவுக்காக வரும்போது குளித்து விட்டு வர வேண்டும் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜுமுஆ ஹதீஸ் எண் 1956)

தண்ணீர் உள்ளது என்றால், வசதி உள்ளது என்றால் குளிப்பது அவசியமாகும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? என்றார்கள். ஹதீஸ் தொடரில் மற்ற சஹாபிகளை விட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்ட ஹதீஸ்கள் மிகக் குறைவு ஆகும். அன்னாரின் அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கை 146 ஆகும். அவற்றில் 3 புகாரி மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டிலும் இடம்பெற்றுள்ளன. 8 அறிவிப்புகள் புகாரியில் மட்டும் உள்ளன. 5 அறிவிப்புகள் முஸ்லிமில் மட்டும் உள்ளன. இவ்வாறு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மொத்தம் 16 ஹதீஸ்கள் ஸஹீஹைன் நூல்களில் இடம் பெற்றுள்ளன.

அன்னாரின் அறிவிப்புகள் மிகக் குறைவாக காணப்படுவதன் காரணம் என்னவென்றால், ஹதீஸ்களை அறிவிப்பதில் அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹதீஸ்களை அறிவிப்பதில் மிகவும் அதிகமாக முன்னெச்சரிக்கையாக இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து (ஹதீஸ்) அறிவிப்பதில் தடுத்த விஷயம் என்னவென்றால், பிற சஹாபிகளுக்கு முன்னால் தனது நினைவாற்றல் அதிக உறுதியுள்ளதாக இல்லாமல் இருந்தது ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று கூறுவார்கள். இந்த சஹாபிகளின் நினைவாற்றலுக்கு முன் எனது நினைவாற்றல் அந்த அளவுக்கு உறுதியானதாக இல்லை. நான் கூறும் அறிவிப்பில் அவர்களின் கூற்று சரியாக இருக்கலாம். இது எனக்கு தடையாக இருந்தது. ஆகவே ஹதீஸுகளை அறிவிப்பதில் நான் அதிக கவனத்துடன் இருந்தேன். ஆனால் நான் கூறாத ஒன்றை நான் கூறியதாக ஒருவர் என்னைச் சுட்டிக் காட்டினால் அவர் நரகத்தை தனது தங்குமிடமாக ஆக்கிக் கொள்கிறார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக நான் சாட்சி கூறுகிறேன். அன்னார் கூறியதை நான் கேட்டேன் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) என்று அவர்கள் கூறினார்கள். ஆகவே ஹதீஸுகளை அறிவிப்பதில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கடுமையான முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டார்கள்.

அப்துர் ரஹ்மான் பின் ஹாதிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை விட முழுமையாக ஒரு விஷயத்தை பேசக்கூடிய எந்த சஹாபியையும் நான் கண்டதில்லை. ஆனால் ஹதீஸுகளை அறிவிப்பதில் அன்னார் அஞ்சக் கூடியவர்களாக இருந்தார்கள்.

(முஹைனுத்தீன் அஹ்மத் நத்வீ அவர்கள் எழுதிய சீருஸ் சஹாபா (ரலி) குலஃபாயே ராஷிதீன் (ரலி) என்ற நூல் தொகுதி 1 பக்கம் 204)

ஹும்ரான் பின் அபான் அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் வுளூ செய்வதற்காக தண்ணீர் கொண்டு வரச் சொன்னார்கள். வாய் கொப்பளித்தார்கள். மூக்கில் தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்தார்கள். மூன்று முறை முகம் கழுவினார்கள். கைகளை மூன்று முறை கழுவினார்கள். தலையின் மீதும், இரண்டு கைகளுக்கு மேற்பட்ட பகுதிகளிலும் மஸஹ் செய்தார்கள் (தடவினார்கள்). அதன் பிறகு அன்னார் சிரித்தார்கள். நான் சிரித்ததற்கான காரணத்தை என்னிடம் கேட்க மாட்டீர்களா? என்று தம் உடனிருந்தவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் ஏன் சிரித்தீர்கள்? எனக் கேட்டனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த இடத்திற்கு அருகில் தண்ணீர் கேட்டதை நான் கண்டேன். நான் வுளூ செய்ததுபோன்றே அன்னார் (ஸல்) அவர்களும் வுளூ செய்தார்கள். அதன் பிறகு அன்னார் சிரித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளைப் பார்த்து, நான் ஏன் சிரித்தேன் என்று என்னிடம் கேட்க மாட்டீர்களா? என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஏன் சிரித்தீர்கள்? என்று அவர்கள் கேட்டார்கள்.

அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதன் வுளூவிற்காக தண்ணீர் கொண்டு வரச் செய்து தனது முகத்தை கழுவினால், அவனது முகத்தினால் நிகழ்ந்து அனைத்து பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். பிறகு அவன் தனது கைகளை கழுவும்போதும் இவ்வாறே நடக்கிறது. பிறகு அவன் தனது தலையை கழுவும்போதும் நடக்கிறது. பிறகு அவன் தனது பாதங்களை தூய்மையாக்கும்போதும் இவ்வாறே நடக்கிறது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 201 முஸ்னத் உஸ்மான் பின் அஃபான் ஹதீஸ் எண் 415 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பு வுளூ குறித்த முதல் அறிவிப்புடன் கூறப்பட்டிருக்க வேண்டும். இப்போது கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் திருமணங்கள் மற்றும் சந்ததிகள் குறித்து அறிவிப்புகளில் கூறப்பட்டதற்கிணங்க, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 8 திருமணங்கள் செய்துள்ளார்கள். இந்த அனைத்து திருமணங்களையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகே செய்தார்கள். அன்னாருடைய மனைவிகள் மற்றும் பிள்ளைகளின் பெயர்கள் இவ்வாறு கூறப்பட்டுள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வியாகிய ஹஸ்ரத் ருக்யா அன்னாரின் மனைவியாவார். அன்னாரின் மூலமாக அப்துல்லாஹ் பின் உஸ்மான் என்ற மகன் பிறந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புதல்வியாகிய ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்களும் அன்னாரின் மனைவியாவார். ஹஸ்ரத் ருக்யா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரை திருமணம் செய்தார்கள்.

ஹஸ்ரத் ஃபாக்தா பின்த் கஸ்வான் அன்னாரின் மனைவி ஆவார்கள். இவர் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் அவர்களின் சகோதரியாவார். இந்த மனைவி மூலமாக ஒரு மகன் பிறந்தார். அவருடைய பெயரும் அப்துல்லாஹ் ஆகும். அவர் அப்துல்லாஹ் அல் அஸ்கர் என்றும் அழைக்கப்பட்டார்.

ஹஸ்ரத் உம்மே உமர் பின்த் ஜுன்தப் அஸதியா அவர்கள் மூலமாக அம்ர், காலிது, அபான், உமர் மற்றும் மர்யம் ஆகியோர் பிறந்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா பின்த் வல்த் முஹ்ஸூமியா அன்னாரின் மனைவி ஆவார்கள். அன்னார் மூலமாக வலீத், ஸயீது மற்றும் உம்மே ஸயீது ஆகியோர் பிறந்தனர்.

ஹஸ்ரத் உம்மே பனீன் பின் உயய்னா ஹிஸ்ன் ஹஸாரியா அவர்கள் மூலமாக அப்துல் முல்க் என்ற மகன் பிறந்தார். ஹஸ்ரத் ரம்லா பின்த் ஷைபா அவர்கள் மூலமாக ஆயிஷா, உம்மே அபான், உம்மே அம்ர் ஆகியோர் பிறந்தனர். ஹஸ்ரத் நாயிலா பின்த் ஃபுராஃபிஸா பின்த் அஹ்ஃபஸ் அவர்கள் முதலில் கிறிஸ்துவராக இருந்தார். ஆனால் திருமணம் முடித்து மணமகன் இல்லம் செல்வதற்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். மேலும் மிகச்சிறந்த முஸ்லிம் பெண்மணியாக திகழ்ந்தார்கள். இவர்கள் மூலமாக மர்யம் என்ற மகள் பிறந்தார். அம்பஸா என்ற மகனும் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்தபோது ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னாருடன் இந்த நான்கு மனைவிகள் இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. அவர்களின் பெயர்கள்: ஹஸ்ரத் ரம்லா, ஹஸ்ரத் நாயிலா, ஹஸ்ரத் உம்முல் பனின், ஹஸ்ரத் ஃபாத்திஹா ஆகியோர் ஆவர்.

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்த நாட்களில் ஹஸ்ரத் உம்முல் பனீன் அவர்களை தலாக் செய்து விட்டதாகக் கூறப்படுகிறது.

(சீரத்துல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான் பக்கம் 17.......... 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா நூர் என்ற அதிகாரத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: நன்மை தீமையை பிரித்தறியக்கூடிய ஞானத்தின் ஒளி ஒன்று உள்ளது என அல்லாஹ் கூறுகிறான். இரவு பகலாக எந்த வீட்டில் அல்லாஹ்வின் பெயர் கூறப்படுமோ அந்த வீட்டில் இந்த ஒளி இருக்கும். அங்கு வசிப்பவர்கள் வியாபாரிகளாவர். அவர்கள் வீடு

சிறிது ஆகும். ஆனால் ஏதேனும் ஒரு நாளில் அல்லாஹ் அவர்களின் வீட்டை பெரியதாக ஆக்கி விடுவான். இந்தக் குர்ஆனை ஒன்று திரட்டியவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள். அதன் பிறகு அதை வெளியிட்டவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மூலமாக உண்மையான ஆன்மீக ஞானங்கள் உலகிற்கு கிடைத்தன.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடமிருந்து நேரடியாக திருக்குர்ஆனின் சில ஞானங்களை நானும் பெற்றுள்ளேன்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அன்ஸாரிடத்தில் கிலாஃபத் ஏற்படாது. மாறாக, முஹாஜிர்களிடத்தில் தோன்றும் என இந்த ருகூகளில் அல்லாஹ் கூறியுள்ளான். இதை முஸ்லிம்களும் எதிர்ப்பார்கள், காஃபிர்களும் எதிர்ப்பார்கள் என்று கூறியுள்ளான். ஆகவே இவ்வாறு தான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எதிர்க்கப்பட்டார்கள். சிலர் கிலாஃபத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அல்லாஹ் இவருடைய உதாரணத்தையும் குறிப்பிட்டுள்ளான். ஒருவர், வெண்மையான புகையை தண்ணீராக நினைப்பவர். இரண்டாமவர், ஷரீஅத்தின் கடலில் இருந்து கொண்டு அதை எதிர்ப்பவர். முடிவு எவ்வாறு இருக்குமென்றால், விலங்குகளும் பறவைகளும் அவர்களின் இறைச்சியை உண்ணும். நேர்வழி பெற்ற கலீஃபாக்களுள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பெரும் துன்பங்கள் ஏற்பட்டன. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் படை அனுப்பி வைக்கப்பட்டது. இங்கு அரபு நாட்டில் எல்லா இடங்களிலும் கிளர்ச்சி பரவி விட்டது. மக்காவில் கிளர்ச்சி செய்வதற்கு மக்கள் தயாராக இருந்தனர். அப்போது புத்திசாலியான ஒரு மனிதர் அங்கு வந்தடைந்தார்கள். நம்பிக்கை கொள்வதில் எல்லாரையும் விட பின்னால் நீங்கள் இருந்தீர்கள். இப்போது முர்தத் ஆவதில் எல்லாரையும் விட முதலில் இருக்கின்றீர்கள் என்று மக்காவாசிகளைப் பார்த்து அவர் கூறினார். அப்போது அவர்கள் அதை விட்டு விலகிக் கொண்டார்கள்.

اِذَا فَرِيْقٌ مِّنْهُمْ مُّعْرِضُوْنَ அவர்களுள் ஒரு பிரிவினர் புறக்கணிக்கத் தொடங்கி விடுகின்றனர் என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ள பிரிவினர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் வெற்றியடையவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்திலும் வெற்றியடையவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் காலத்திலும் வெற்றியடையவில்லை.

சுருக்கமாக, ஒருபோதும் வெற்றி பெறவில்லை. இக்கூட்டம் ஒருபோதும் வெற்றியடையவில்லை. ஆனால் இன்னொரு கூட்டம் ஒன்று உள்ளது. அது سَمِعْنَا وَاَطَعْنَا கூட்டமாகும். இது வெற்றி பெறும் கூட்டமாகும். எப்போதும் வெற்றி பெற்றுள்ளது. திருக்குர்ஆனில் اُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ என்று கூறப்பட்டுள்ளது.

(ஹகாயிக்குல் ஃபுர்கான் தொகுதி 3 பக்கம் 223)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் பண்புகளை மேற்கொள்ளாத வரை எவராலும் நம்பிக்கையாளராகவோ, முஸ்லிமாகவோ ஆக முடியாது என்பதை நான் அறிகின்றேன். அவர்கள் உலகை நேசிக்கவில்லை. மாறாக அவர்கள் தம் வாழ்க்கையை இறைவழியில் அர்ப்பணித்திருந்தார்கள்.

(லெக்சர் ஸியால்கோட், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 294)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள் மிகப்பெரும் உண்மையாளர், ஹஸ்ரத் ஃபாரூக்கே உமர் (ரலி), ஹஸ்ரத் துன் நூரைன் (ரலி) இரண்டு ஒளிகளையுடையவர். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி). பிறகு ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) ஆகிய அனைவரும் உண்மையில் மார்க்கத்தில் நம்பிக்கைக்குரியவர்களாக திகழ்ந்தனர் என்ற இந்தக் கொள்கை அவசியமாகும். இஸ்லாத்தின் இரண்டாவது ஆதமாக திகழ்ந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இவ்வாறே ஹஸ்ரத் உமர் ஃபாரூக் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் மார்க்கத்தில் உண்மையான நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாதிருப்பின் இன்று திருக்குர்ஆனின் எந்தவொரு வசனத்தையும் இறைவன் புறமிருந்து வந்ததாக நாம் நிரூபிப்பது கடினமாக இருந்திருக்கும்.

(மத்தூபாத்தே அஹ்மத் தொகுதி 2 பக்கம் 151 கடிதம் எண் 2 – ஹஸ்ரத் கான் சாஹிப் முஹம்மத் அலி கான் சாஹிப் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் – ரப்வாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் இந்த இரு சான்றோர்களையும் – அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி), அத்துடன் மூன்றாமவராக துன் நூரைன் – இரு ஒளிகளையுடையவரும் இருக்கின்றார். இவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால், இஸ்லாத்தின் வாசலிலும், படைப்பினங்களில் சிறந்தவராகிய முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் படையின் முன்னனியிலும் இருப்பவர்களாக அல்லாஹ் இவர்களை ஆக்கியுள்ளான். ஆகவே எவர் ஒருவர் இவர்களின் மேன்மையை மறுப்பாரோ, அவர்களின் தெளிவான சான்றை அற்பமாக நினைப்பாரோ மேலும் அவர்களுடன் நாகரீகமாக நடந்து கொள்ளாமல் அவர்களை இழிவுபடுத்துவாரோ, அவர்களை ஏசிப்பேசுவதற்கு எந்நேரமும் ஆயத்தமாக இருப்பாரோ, அவர்களை வசைபாடுவாரோ அவ்வாறான மனிதரின் தீய முடிவைக் குறித்தும், அவரின் ஈமான் வீணாகிவிடுவதைக் குறித்தும் நான் அஞ்சுகிறேன். அந்த சான்றோருக்கு எவர்கள் துன்பம் கொடுத்தார்களோ, அவர்களை ஏசினார்களோ, அவதூறு சுமத்தினார்களோ அவ்வாறானவர்களின் உள்ளம் கடினமாகிப் போனது. கருணைமிக்க இறைவனின் கோபம் அவர்களின் முடிவானது.

பலமுறை எனக்கு அனுபவமுள்ளது. நான் தெளிவாக இதை வெளிப்படுத்தியும் உள்ளேன். அதாவது இந்த சான்றோர்களோடு பகைமையும் வெறுப்பும் கொள்வதென்பது, அருள்களை வெளிப்படுத்தும் அல்லாஹ்வுடன் அதிகமாக தொடர்பை துண்டித்துக் கொள்வதற்கு காரணமாக அமையும். எவர் அவர்களிடத்தில் விரோதத்தை மேற்கொள்வாரோ அவ்வாறான மனிதர் மீது கருணை மற்றும் பரிவின் அனைத்து வழிகளும் மூடப்பட்டு விடும். அப்படிப்பட்ட மனிதருக்காக அறிவு, ஞானத்தின் வாசல்கள் திறக்கப்படாது. அவர்களை அல்லாஹ் உலகின் இன்பங்களிலும், இச்சைகளிலும் விட்டு விடுவான். மேலும் மன விருப்பங்களின் கோட்டைகளில் விழச்செய்து விடுவான். மேலும் தனது வாசலிலிருந்து விலகி இருப்பவனாகவும், பயனடையாதனாகவும் அவனை ஆக்கி விடுகின்றான்.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்ககம் பக்கம் 28, 29 –

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ரப்பாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மூவரின் மூலமாகவே இஸ்லாம் உருவானது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 414)

அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர்.

பிறகு ஷியாக்களைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களுடைய ஏச்சுப் பேச்சுகளைக் கண்டு நான் என்ன முறையீடு கூறுவது! ஏனென்றால் நீங்கள் எல்லா சஹாபிகளையும் சிறிதளவேனும் ஏசுகிறீர்கள். மேலும் அத்துடன் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியார்களாகிய நம்பிக்கை கொண்டோரின் தாய்மார்களை சாபத்துடன் நினைவு கூருகிறீர்கள். இறை வேதத்தில் சிறிது கூட்டப்படுவதும், சிறிது குறைக்கப்படுவதும் உள்ளது என கருதுகிறீர்கள். அது இறைவன் புறமிருந்து இல்லை. மாறாக, உஸ்மானின் குறிப்புகள் எனக் கூறுகிறீர்கள். காய்ந்த நிலத்தையும், பயிர் அற்று காலியாக இருக்கும் பாலை வனத்தைப்போன்று இஸ்லாத்தை கருதுகிறீர்கள். அதாவது இறை நெருக்கம் பெற்ற மக்கள் இல்லாமல் இருப்பதாக கருதுவது.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: எல்லை மீறியவர்களே! உங்களின் கரங்களிலிருந்து என்ன கண்ணியம்தான் எஞ்சியிருக்கிறது.

(ஹுஜ்ஜத்துல்லாஹ், ரூஹானீ கஸாயின் தொகுதீ 12 பக்கம் 184, 185)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: கிலாஃபத் குறித்து எனது இறைவனிடமிருந்து எனக்கு அடிப்படையான ஆய்வு ஞானம் வழங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்களைப் போன்று இந்த உண்மையின் ஆழம் வரை நான் சென்று விட்டேன். சித்தீக், ஃபாரூக், உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் நற்செயல் புரிபவர்களும், நம்பிக்கை கொண்டோரும் ஆவர் என என் இறைவன் எனக்கு வெளிப்படுத்தியுள்ளான். மேலும் அவர்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். மேலும் கருணையாளனாகிய இறைவனின் அருட்கொடைகளால் சிறப்பிக்கப்பட்டவர்கள் ஆவர். பெரும்பாலான (இறை) ஞானிகள் இவர்களின் உயர் குணங்களுக்கு சான்றளித்துள்ளனர். இவர்கள் மேன்மையும், சிறப்புமிக்க இறைவனின் தன்னிறைவிற்காக தங்கள் நாடுகளை துறந்தார்கள். ஒவ்வொரு போரின் உலையிலும் நுழைந்தார்கள். மேலும் கோடை காலங்களின் மதிய உஷ்ணத்தையும், குளிர் காலங்களின் இரவின் குளிர்ச்சியையும் இவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக, புத்தம்புதிய இளைஞர்களைப்போன்று மார்க்கத்தின் வழிகளில் தம்மை மாய்த்துக் கொண்டார்கள். தம்மவர்கள் பக்கமோ, அந்நியர்கள் பக்கமோ சாய்ந்து விடவில்லை. அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்காக அனைவருக்கும் விடை கொடுத்து விட்டார்கள். இவர்களின் செயல்களிலும், நடைகளிலும் நறுமணம் கமிழ்கிறது. மேலும் இவை அனைத்தும் இவர்களின் அந்தஸ்துகள் எனும் தோட்டங்களை நோக்கியும், இவர்களின் நன்மைகள் எனும் பூத்தோட்டங்களை நோக்கியும் வழி நடத்துகின்றன. அவற்றின் தென்றல் காற்று தனது நறுமணம் கமிழும் வீச்சால் இவர்களின் இரகசியங்களைத் தெரிவிக்கின்றது. இவர்களின் ஒளிகள் தமது முழுமையான பண்பால் நம்மீது வெளிப்படுகின்றன. ஆகவே நீங்கள் அவர்களின் ஒளிமிக்க பிரகாசமான அந்தஸ்துகளை அவர்களின் நறுமணத்தால் அறிந்து கொள்ளுங்கள். மேலும் அவசரப்பட்டவாறு தப்பெண்ணங்களை பின்பற்றி விட வேண்டாம். மேலும் சில அறிவிப்புகளைக் கண்டு அவற்றின் பக்கம் சாய்ந்து விட வேண்டாம். ஏனென்றால் அவற்றில் அதிக விஷமும், அதிக மிகைப்படுத்துதலும் உள்ளது. அவை நம்பத்தகுந்ததல்ல. அவற்றில் பெரும்பாலான அறிவிப்புகள் தலைகீழாக புரட்டிப்போடும் புயலைப்போன்றும், மழை வருவதாக ஏமாற்றும் மின்னலைப் போன்றதாகவும் உள்ளன. ஆகவே அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். மேலும் இந்த அறிவிப்புகளை பின்பற்றுபவர்களைச் சார்ந்தவர்களாகி விடாதீர்கள்.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்ககம் பக்கம் 25, 26 – ரப்பாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இத்துடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நற்குறிப்பு முற்றுப் பெறுகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு இன்ஷா அல்லாஹ் இனி வரும் காலத்தில் ஆரம்பமாகும்.

திருக்குர்ஆனை Search செய்ய al-islam புதிய websit–ன் முதல் Version–ஐ உருவாக்கியுள்ளது. holyquran.io ஆகும். இந்த website அல் இஸ்லாம் வலைதளத்திற்கு செல்லாமலேயே தனியாக பார்க்க இயலும். எந்தவொரு சூராவையும், ஆயத்தையும், சொல்லையும் அல்லது கருத்தையும், அரபி, ஆங்கிலம், உருதுவில் ஒரு புதிய Search Engine–வுடன் தேடலாம்.

Search செய்வதன் பலனாக அஹ்மதி மற்றும் அஹ்மதியல்லாதவர்களின் மொழியாக்கங்களை காணலாம். ஒவ்வொரு வசனத்துடன் அதன் விளக்கவுரை, கட்டுரை மற்றும் அதனுடன் தொடர்புடைய வசனங்களை காண இயலும். மேற்கொண்டு உள்ளடக்கத்தை அதிகப்படுத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் அடுத்த பகுதி 2021 U.K ஆண்டு மாநாட்டிற்குள் ஆயத்தமாகி விடும். இன்ஷா அல்லாஹ். இது தவிர அல் இஸ்லாம் website–ல் திருக்குர்ஆன் படிப்பதற்கு, கேட்பதற்கு, Search செய்வதற்கு readquran.app எனும் websites புதிய தோற்றத்தில், அழகிய Version ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் ஆங்கில விளக்கவுரையுடன், தஃப்ஸீரே ஸகீரின் Notes, ஒவ்வொரு சொல்லுக்குமான ஆங்கில மொழியாக்கம், பொருளடக்கம், தினந்தோறும் திருக்குர்ஆன் ஓதுவதனால் ஏற்படும் பயன்கள் மற்றும் பல்வேறு பயனளிக்கத்தக்க விஷயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த Project திருக்குர்ஆனின் அழகிய போதனையை உலகில் பரப்புவதற்கு காரணமாக அமையவும், ஜமாஅத்தினர்களும் இவற்றிலிருந்து முழுமையாக பயனடையக் கூடியவர்களாக ஆகவும் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன்.

மேலும் அத்துடன் நான் பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆவுக்காக கூறிக் கொள்கிறேன்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

அல்லாஹ் அவர்களின் நிலையையும் மாற்றுவானாக. அவர்களுக்கு எளிதை ஏற்படுத்துவானாக. அதேபோன்று அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆவுக்காக கூறிக்கொள்கிறேன். அல்லாஹ் அவர்களுக்கும் உறுதியான பாதத்தை வழங்குவானாக. அவர்களின் சூழ்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவானாக.

இப்போது நான் சில ஜனாஸாக்களைக் குறித்து – மரணமடைந்தவர்களைக் குறித்து எடுத்துரைப்பேன். அவர்களின் ஜனாஸா தொழுகையும் தொழ வைப்பேன். பல்வேறு விண்ணப்பங்கள் தற்போது வருகின்றன. ஒவ்வொருவரைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது கடினமாகும். எவ்வாறாயினும் சிலரைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். மீதமுள்ளவர்களின் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் அவர்களையும் நான் இணைத்துக் கொள்கிறேன். அல்லாஹ், இவர்கள் அனைவருடனும் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. எவர்களைப் பற்றி நான் கூற இருக்கின்றேனோ அதை நான் வாசித்து விடுகின்றேன்.

மதிப்பிற்குரிய முஹம்மது சாதிக் சாஹிப் துர்பாராம்பூரி ஆவார்கள். இவர் பங்களாதேஷ், டாக்காவைச் சார்ந்தவர். 14 நவம்பர் 2020 அன்று தமது 75 வது வயதில் மரணமடைந்தார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رَاجِعُوۡنَ

மர்ஹூம் அவர்கள் இதர பொறுப்புகளுடன், நீண்ட காலமாக தேசிய வக்ஃபே நவ் செயலராக தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றார். வாகிஃபீனே நவ் மற்றும் பெற்றோர்களுடன் வகுப்புகளை நடத்துவதற்காக தொலை தூரம் ஜமாஅத்துகளுக்கு முறையாக சுற்றுப் பயணம் செய்து வந்தார்கள். நோய் இவர்களை நிர்பந்திக்காத வரை முறையாக பள்ளிவாசலுக்கு சென்று வந்தார்கள். மர்ஹூம் மூஸி ஆவார்கள். அன்னார் தமக்குப் பின்னால் மனைவி மட்டுமின்றி 3 மகன்களையும், 1 மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த ஜனாஸா ஒரு பெண்மணியுடையதாகும். ரப்வாவைப் சேர்ந்த ரஷீத் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியான முஃதாரா பீபீ சாஹிபா ஆவார்கள். புர்கினோஃபாஸோவின் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனின் பிரின்ஸிபல் நஸீம் பாஜ்வா சாஹிப் அவர்களின் மாமியார் ஆவார்கள். ஜனவரி 16 அன்று மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رَاجِعُوۡنَ

மேற்கு தாருல் யமன் லஜ்னாவின் செயற்குழுவில் ஒட்டுமொத்தமாக 17 வருடங்கள் தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். பல்வேறு நாடுகளில் பொருள் தியாகம் செய்யும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். இலட்சக்கணக்கில் பெரும் தியாகம் செய்யும் நல்வாய்ப்பை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கியுள்ளான். மரணத்திற்கு சில மணி நேரங்கள் முன்பு கண் விழித்தபோது, என்னுடைய வளையல்கள் எங்கே? என்று கேட்டுள்ளார்கள். உடனடியாக தனது மகனிடம் இந்த வளையல்களை விற்று சத்ர் சாஹிபிடம் கொடுத்து வரச் சொல்லியுள்ளார்கள். அது ஏறக்குறைய மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பிலானது. MTA வுக்கான ஏற்பாடு செய்ய, Dish வைப்பதற்காக கொடுத்துள்ளார்கள்.

1995 ஆம் ஆண்டு இவர்களின் இரு மகன்கள் கார் விபத்தில் மரணமடைந்து விட்டார்கள். மிக தைரியத்துடன் வேதனையை பொறுத்துக் கொண்டார்கள். அந்த விபத்து குறித்து ஒருபோதும் பேசியதில்லை. ஒருபோதும் வருந்தியதில்லை. அந்த வேதனையை அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தி கொண்டவாறு பொறுத்து கொண்டார்கள். தப்லீகில் பெரும் ஆர்வம், வேட்கை இருந்தது. ரப்வாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் தப்லீக் செய்வதற்கு தொலைதூரம் வரை செல்வார்கள். திருக்குர்ஆனின் மீது நேசம் இருந்தது. முறையாக தாம் திருக்குர்ஆன் ஓதி வந்ததுடன், வட்டாரத்திலுள்ள குழந்தைகளுக்கும் திருக்குர்ஆன் மற்றும் யஸ்ஸர்னர் குர்ஆனைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்தவர் ஆவார்கள்.

கணவர் மட்டுமின்றி 1 மகனையும், 4 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். 3 மகள்கள் லண்டனில் உள்ளனர். ஒருவர் புர்கினோஃபாஸோவில் உள்ளனர். இங்குள்ள மகள்கள் ஜமாஅத்திற்கு வேலை செய்து வருகிறார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா, மன்ஸூர் அஹ்மது ஷாத் சாஹிப் அவர்களுடையதாகும். ஜனவரி 17 அன்று 82 வது வயதில் அன்னார் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رَاجِعُوۡنَ

இவரது குடும்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான இவரது தந்தை ஹஸ்ரத் மியான் அப்துல் கரீம் சாஹிப் மூலமாக 1903 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத் கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கரீம் பக்ஷ் வழக்கு தொடர்பாக ஜெஹ்லம் சென்றிருந்தார்கள். கராச்சியின் மாவட்ட காயிதாக தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார். அங்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவில் மிக நல்ல பணியாற்றியுள்ளார். பிறகு Dring ring road colony வுடைய ஜமாஅத் சதராகவும், கராச்சியினுடைய துணை அமீராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. 1984 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை சகர் எனும் இடத்தில் வரவேற்ற குழுவில் இவரும் இருந்தார். கிளம்பிச் செல்லும் வரை விமான நிலையத்திலேயே இருந்தார்கள். 2010ல் இலண்டனுக்கு இடம் பெயர்ந்தார். இங்கு பைத்துல் ஃபுதூஹ் ஹோமியோபதி Dispensary ல் முறையாக நேரம் கொடுத்து வந்தார்கள். மரண காலம் வரை அன்னார் தர்பிய்யத் செயலராகவும், புதிதாக பைஅத் செய்பவர்களின் தர்பிய்யத் செயலராகவும் பெரும் தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டிருந்தார்கள். மர்ஹூம் மூஸி ஆவார்கள். இவருடைய 2 மகன்வழிப் பேரன்களும், 1 மகள்வழிப் பேரனும் முரப்பி ஆவார்கள். இங்கு UK வில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள். அல்லாஹ் (மர்ஹூமுடன்) பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா USA வைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் சலீம் அவர்களுடைய மனைவி ஹமீதா அக்தர் சாஹிபா அவர்களுடையதாகும். ஜனவரி 19 அன்று 92 வது வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رَاجِعُوۡنَ

மர்ஹூமாவிற்கு நீண்ட காலமாக, ஏறக்குறைய 50 ஆண்டு கராச்சி மற்றும் ராவல்பிண்டி லஜ்னா இமாயில்லாஹ்வில் தொண்டாற்றும் வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான். General Sec. ஆகவும், லஜ்னா சதராகவும், நிக்ரான் கியாதத் ஆகவும் அன்னார் தொண்டாற்றியுள்ளார்கள். கிலாஃபத்தை மிக அதிகமாக நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் பரிசுத்தமான முறையில் தொடர்பு கொண்டிருக்குமாறு குழந்தைகளிடத்திலும்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

அறிவுறுத்தி வருவார்கள். முழு வாழ்விலும் தொழுகையை பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றக் கூடியவராக இருந்துள்ளார்கள். திருக்குர்ஆன் ஓதுவதற்கும், ஒதிக் கொடுப்பதற்கும் குறிப்பான ஏற்பாடுகளை மேற்கொள்பவராக இருந்தார். தமது பிள்ளைகளுக்கும் திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்துள்ளார்கள். மேலும் உம்ரா செய்யும் நல்வாய்ப்பும் இவருக்கு கிடைத்துள்ளது. மர்ஹூமா மூஸியா ஆவார்கள்.

மர்ஹூமா தமக்குக் பின்னால் 5 மகன்களையும், 2 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். அவரது சந்ததிகளிலும் பலர் மார்க்கத்தின் தொண்டர்கள் உள்ளனர். பல்வேறு பொறுப்புகளின் மூலமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றனர். டாக்டர் அப்துஸ் ஸலாம் மற்றும் டாக்டர் கலீக் மலிக் சாஹிப் ஆகியோர் நல்ல தொண்டாற்றுகிறார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா ஜெர்மனிய அஹ்மதியான மதிப்பிற்குரிய நாஸிர் பீட்டர் லூட்ஸீன் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் ஜனவரி 20 அன்று வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவரது மகன் கூறுகிறார்: 1983 ஆம் ஆண்டில் ஒரு நாள் எனது பெற்றோர்கள் ஹேனோ என்ற நகரத்தினுடைய மைய கடைவீதியை கடந்து கொண்டிருக்கும்போது அவர்களின் பார்வை ஒரு ஸ்டாலில் விழுந்தது. அந்த ஸ்டாலில் ஒரே ஒரு மேஜைதான் இருந்தது. அதில் சில அறிமுக நூல்கள் இருந்தன. அதற்குப் பின்னால் ஒரிரு வெளிநாட்டு இளைஞர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டபோது, அது இஸ்லாத்தின் பிரதிநிதியான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தப்லீக் ஸ்டால் என்று தெரிய வந்தது. ஆகவே அந்த இளைஞர்களிடத்தில் கேள்விகளையும் கேட்டனர். Literature களையும் உடன் எடுத்துக் கொண்டனர். Literature-களை படித்த பிறகு மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொண்டு சந்தித்தனர். அந்த 3 அஹ்மதிகளும் அவர்களை தம் இடத்திற்கு உணவுக்காக அழைப்பு கொடுத்தனர். அது ரமலான் மாதமாக இருந்தது. இஃப்தாரிக்கு எனது பெற்றோர்கள் அவர்களின் வீட்டுக்கு சென்றனர். தரையில் பழைய பேப்பர்களை விரித்து அதில் அவர்கள் உணவுகளை வைத்திருந்தனர். உட்காருவதற்கு வேறு இடம் ஒன்றும் இருக்கவில்லை. கீழே தரையில் அமர்ந்து கம்பளத்தில் பழைய paper களை விரித்திருந்தார்கள். அதில் உணவுகளை வைத்திருந்தனர். எனது பெற்றோருக்கு உணவு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அதை விட அதிகமாக அவர்களின் எளிமை மற்றும் விருந்தோம்பல் நன்கு பிடித்திருந்தது.

அதன் சுவை அதிகமாக அவர்களுக்கு ஏற்பட்டது. உணவுக்குப் பிறகும் உரையாடல் நடந்தது. பிறகு வீட்டுக்கு வந்து செல்வது ஆரம்பமானது. சில மாதங்கள் வரை படித்து ஆய்வு செய்த பின்னர் 1984 ல் எனது பெற்றோர்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். அது பெருநாளாக இருந்தது.

உள்ளூர் நண்பர்களுடன் மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் ஹேம்பர்க் சென்றார்கள். மேலும் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள். ஒரு முறை ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது.

அவரது மகள் கூறுகிறார்: எனது தாயாருக்கு மார்க்கத்துடன் குறிப்பான ஆர்வம் இருந்தது. உண்மையான மார்க்கத்தை தேடும் அவர்களின் ஆன்மாவானது அவர்களை அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்த்தது. அதன் பிறகு உயிருள்ள இறைவனுடன் அவர்களுக்கு உயிருள்ள தொடர்பும் உண்டானது. மேலும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அடையாளங்களை பல முறை அவர்கள் கண்டுள்ளார்கள். அல்லாஹ்வும் அடையாளங்களை எவ்வாறு காட்டுகிறான் எனப் பாருங்கள்.

மகள் கூறுகின்றார்: எனது தாயாருடைய ஒரு கண் பார்வையற்றதாக இருந்தது. 1986 ல் UK ஆண்டு மாநாட்டில் பங்கு பெற்றார்கள். திடீரென்று அவர்களது கண் பார்வை ஓரளவுக்கு திரும்பியது. முதலில் அந்தக் கண் முற்றிலும் பார்வையற்றதாக இருந்தது. ஆனால் பிறகு அந்த கண் மூலமாக கொஞ்சம் கொஞ்சமாக தெரிய ஆரம்பித்தது.

மகள் கூறுகின்றார்: யாருக்கு ஒரு கண் முற்றிலும் செயலிழந்து போய் விடுமோ அவருக்கு இது அற்புதத்தை விட குறைந்ததல்ல. 11 வருடங்கள் வரை கண் பார்வையை இழந்த பிறகு இந்த அற்புதம் நிகழ்ந்தது. கலப்பற்ற துஆவின் காரணமாகவும், ஆண்டு மாநாட்டிற்கு வந்து துஆக்கள் செய்ததன் காரணமாகவும் இந்த அருள் எனக்கு கிடைத்தது என்று (எனது தாயார்) கூறி வந்துள்ளார்கள்.

இலண்டனில் ஒரு ஜெர்மனிய அஹ்மதி கதீஜா சாஹிபாவின் வீட்டில் தங்குவார்கள். ஒரு நாள் எனது பெற்றோர்கள் அந்த வீட்டிலிருந்து நடைபயிற்சி செய்வதற்காக வெளியேறினார்கள். கொஞ்சம் தூரம் வரை சென்று விட்டார்கள். திரும்பி வருவதற்குரிய வழியை மறந்து விட்டார்கள். இருள் அதிகரித்ததுடன் அவர்களுக்கு கவலையும் அதிகரித்தது. Trafic அதிகமாக உள்ள ஒரு பாதையில் நின்று கொண்டிருந்தார்கள். எங்கு நிற்கிறோம் என்றே தெரியவில்லை. இருள் இன்னும் அதிகரித்ததும், பாதையையும் மறந்து விட்டதும் இப்போது துஆ செய்யலாம் என எனது தாயார் கூறினார். துஆ செய்து முடிக்கத்தான் செய்திருப்பார்கள், மதிப்பிற்குரிய கதீஜா சாஹிபாவின் மருமகன் தமது வண்டியுடன் அவர்களுக்கு முன் நின்று கொண்டிருந்தார். நீங்கள் வண்டியில் உட்காருங்கள். நான் உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தார்.

துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த காட்சி, அவர்களின் ஈமானை இன்னும் புதுப்பித்தது. மேலும் வலுப்படுத்தியது.

ஜெர்மனியின் முரப்பி ஸயீக் முனீர் சாஹிப் எழுதுகிறார்கள்: லேத்ஸீன் சாஹிபின் முழு குடும்பமும் அஹ்மதியாக இருந்தது. இவர்களின் குடும்பம் மட்டுமே ஜெர்மனி அஹ்மதி குடும்பமாக உள்ளது என்று நாங்கள் பேசிக் கொள்வோம். அவர் மிகப்பற்றுள்ள, குறைவாகப் பேசுகின்ற, நல்ல ஆன்மாவாக இருந்தார்கள். பொருள் தியாகத்திலும் லேத்ஸீன் சாஹிப் முன்னிலையில் இருப்பார்கள். தப்லீக் நிகழ்ச்சிகளில் சொற்பொழிவாற்றுவார்கள். அவர்களுக்கு முன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் கூறப்பட்டால் அவருடைய கண்கள் ஈரமாகி விடும். ஒரு தப்லீக் மீட்டிங்கில் இஸ்லாத்தின் போதனையை எந்த அளவுக்கு அழகிய முறையில் மர்ஹூம் எடுத்து வைத்தார்கள் என்றால் 70 வயதுடைய ஒரு ஜெர்மனியர் என்னிடம் வந்து, இஸ்லாத்தைக் குறித்து இன்று எனக்கு தெரிய வந்ததைப் போன்று இதற்கு முன் ஒருபோதும் தெரிய வந்ததில்லை என்று கூறினார்.

அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் சந்ததிகளையும் அஹ்மதிய்யத்தில் நிலைபெறச் செய்வானாக.

அடுத்த ஜனாஸா கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ரஸியா தன்வீர் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் ஜமாஅத்தின் முரப்பியும், ரப்வா ஜாமிஆவின் துணை முதல்வருமான கலீல் அஹ்மது தன்வீர் சாஹிப் அவர்களின் மனைவியாவார். ஜனவரி 27 அன்று 58 ஆம் வயதில் கனடாவில் வஃபாத் ஆனார்கள். அவருக்கு கேன்சர் நோய் இருந்தது. மர்ஹூமாவுக்கு சிறு வயது முதல் மார்க்க பணிகளில் பெரும் ஆர்வம் இருந்தது. அது மரணம் வரை

நிலைபெற்றிருந்தது. 22 ஆண்டுகளாக பாகிஸ்தான் லெஜ்னா இமாயில்லாஹ் அலுவலகத்திலும், மிஸ்பாஹ் மாத இதழ் அலுவலகத்திலும், எழுத்தாளராக பல்வேறு துறைகளிலும் தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றார்கள். நோய்வாய்ப்படும் வரை தொண்டின் இத்தொடர் தொடர்ந்தது. ஹஸ்ரத் சோட்டி ஆபா சாஹிபா அவர்களுடன் இவர்கள் பெருமளவு பணி செய்வதற்கு வாய்ப்பு பெற்றார்கள். பல விஷயங்கள் கற்பதற்கு வாய்ப்பு பெற்றார்கள். அவர்களின் துஆக்களை பெறுவதற்கான வாய்ப்பை பெற்றார்கள். அல்லாஹ் (மர்ஹூமாவுடன்) பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா, சர்கோதா மாவட்டம் தோதாவைச் சேர்ந்த மியான் ஷேர் முஹம்மது சாஹிப் அவர்களின் மகனான மியான் மன்ஸூர் சாஹிப் அவர்களுடையதாகும். பிப்ரவரி 7 ஆம் தேதி வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவருடைய மூத்த சகோதரருக்கு 1955 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது. இவர் மூத்த சகோதரருடன் ரப்வா சென்று வந்தார். அங்கு இவரும் பைஅத் செய்து விட்டார்.

இவருடைய மகன் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்: அன்னார் கிலாஃபத்திற்காக தியாகம் செய்யும் நேசராக இருந்தார். மேலும் கிலாஃபத்திற்கு கட்டுப்படும் விஷயத்திலும் எந்த சாக்குப் போக்கையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். அதை அப்படியே செயல்படுத்தக் கூடியவராக இருந்தார்.

நான் தனிப்பட்ட முறையிலும் இவரை அறிவேன். நிச்சயமாக அன்னார் மிகத் தூய்மையுடன், விசுவாசத்துடன் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக் கூடியவராகவும், கிலாஃபத்திற்கு கட்டுப்படக் கூடியவராகவும் இருந்தார்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பவராகவும், மார்க்கத் தொண்டராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், மிகவும் பணிவுள்ள இயல்புடையவராகவும், ஏழைகளை பராமரிக்கக் கூடியவராகவும், எளிதில் பழகக் கூடியவராகவும், மிகவும் பரிவுள்ள, விருப்பமான நபராக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் சர்கோதாவில் மாவட்ட அளவில் குத்தாமுல் அஹ்மதிய்யா, பிறகு அன்ஸாருல்லாஹ்வில் தொண்டாற்றியுள்ளார். பிறகு ஜமாஅத்தில் Sec.Maal, Sec. waqfe jadeeed, Sec TJ ஆகிய தொண்டுகளை நிறைவேற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. மிக அழகிய முறையில் தம் தொண்டுகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு பெற்றார். இவருடைய மகன்வழி பேரன் சஃபீர் அஹ்மத் என்பவர் இங்கு Private Secretary அலுவலகத்தில் முரப்பியாக பணியாற்றுகிறார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய புஷ்ரா ஹமீது சாஹிபா அவர்களுடையதாகும். இவர் MTA வில் தன்னார்வத் தொண்டராக பணியாற்றும் யமன் தேசத்தைச் சேர்ந்த ஹமீத் அன்வர் சாஹிப் அவர்களின் மனைவியாவார். மேலும் முஹம்மது அஹ்மத் அன்வர் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார். மேலும் MTA வுடைய Director Production முனீர் அஹ்மது அத்வே சாஹிபின் மாமியார் ஆவார்கள். பிப்ரவரி 14 அன்று 69 வது வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் ஹாஜி முஹம்மது தீன் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் பீபீ சாஹிபா அவர்களின் பேத்தியாவார். MTA விலும் பணியாற்றும் வாய்ப்பை பெற்றுள்ளார். லிகா மஅல் அரப் நிகழ்ச்சியின் அனைத்து டேட்டாவையும் Transfer செய்வது தொடர்பாக முறையாக நீண்ட காலம் வரை பணியாற்றி வந்துள்ளார்கள். அத்துடன் அல் அரபிய்யாவிலும் தொண்டாற்றி வந்துள்ளார்கள். எல்லா வித ஜமாஅத் தொண்டுகளையும் செய்ய மகிழ்ச்சியுடன் ஆயத்தமாக இருப்பார்கள். மிகப் பொறுமையுள்ள, நன்றி செலுத்தும் பெண்மணியாக திகழ்ந்தார்கள். அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய நூருஸ் ஸபாஹ் ஸஃபர் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் எல்டோரேப் கென்யாவின் முரப்பியாகிய முஹம்மது அஃப்ஸல் ஸஃபர் சாஹிப் அவர்களின் துணைவியாவார். மார்ச் 25 அன்று 62 வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஜமாஅத்தின் முரப்பி மவ்லானா முஹம்மது சயீத் அன்ஸாரி சாஹிப் அவர்களின் சிறிய மகளாவார். Britain ஐ சார்ந்த மர்ஹூம் நஸீம் பாஜ்வா சாஹிபின் சிறிய மைத்துனி ஆவார்.

மர்ஹூமாவுடைய கணவர் முஹம்மது அஃப்ஸல் சாஹிப் எழுதுகிறார்: அல்லாஹ்வின் அருளால் ஐவேளை தொழுகையை பேணக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழுபவராகவும், முறையாக தினந்தோறும் திருக்குர்ஆனை ஓதுபவராகவும் இருந்தார். துஆவின் மீது அளவு கடந்த நம்பிக்கை இருந்தது. எப்போதும் தாமும் துஆவில் மூழ்கியிருப்பார். மேலும் குழந்தைகளுக்கும் எப்போதும் துஆவைக் குறித்து அறிவுரை செய்து வருவார். முறையாக காலத்தில் கலீஃபாவின் குத்பாக்களை கேட்கக் கூடியவராக இருந்தார். குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக நல்ல நல்ல Points களை மீண்டும் தானும் எடுத்துக் கூறுவார். ஹதீஸ், வரலாறு மற்றும் ஜமாஅத்தின் நூல்களிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களை அதிகமாக குழந்தைகளுக்கு எடுத்துரைப்பார். எப்போதுமே மார்க்கத் தொண்டு குறித்தும், கிலாஃபத்துடன் இணைந்திருப்பது குறித்தும் வலியுறுத்தி வருவார்.

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார். சந்தாவை செலுத்துவதில் உச்சபட்ச முறையை பேணுபவராக திகழ்ந்தார். எல்லா வித பொருள் தியாயகத்திலும் பங்கெடுப்பார். விருந்தோம்பல் அல்லாஹ் அவருக்கு மிக அதிகமாக பரந்த மனப்பான்மையை வழங்கியிருந்தான். மர்ஹூமா என்னுடன் 21 ஆண்டு காலம் வாழ்ந்துள்ளார். மிகவும் பரிவுள்ளவராகவும், புகழத்தக்கவராகவும் இருந்தார். எங்களுடைய இந்த உறவு புகழத்தக்கதாக உள்ளது.

ஸஃபர் சாஹிப் அவர்களின் முதல் மனைவி ஃபிஜியில் இவர் முபல்லிக் ஆக இருந்தபோது ஒரு விபத்தில் ஷஹீதாகி விட்டார்கள். 3 மகள்கள் மற்றும் 1 மகன் மொத்தம் 4 பிள்ளைகளுடன் ஸஃபர் சாஹிப் இரண்டாவது மணம் புரிந்தார். முதல் மனைவியின் 2 பெண் பிள்ளைகளை தாயைப் போன்று நேசித்தார்கள். அதை பெண் பிள்ளைகளே வெளிப்படுத்தியுள்ளார்கள். எங்களுடைய தாய் இல்லை என்ற உணர்வே ஏற்படவில்லையே என்று கூறியுள்ளார்கள். அவர்களுக்கு எப்போதும் நல்ல தர்பிய்யத் வழங்கியுள்ளார்கள். படிக்க வைத்துள்ளார்கள்.

ஸஃபர் சாஹிப் கூறுகிறார்: என்னுடைய பெண் பிள்ளைகளுடன் நல்ல விதத்தில் நடந்து கொண்டது மட்டுமின்றி, என்னுடைய முன்னால் மனைவியின் வீட்டாருடனும் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். இதனால் அவர்களும் மர்ஹூமாவின் நற்பண்புகளால் ஈர்க்கப்பட்டு விட்டார்கள்.

மகள் கூறுகிறார்: எங்களுடைய வாழ்வில் இவர் ஓர் ஒளியாக, ஓர் ஊன்றுகோலாக, பரிவுள்ள தாயாக வந்தார்கள். எங்களை எந்த அளவுக்கு நேசித்து, அன்பு செலுத்தினார்கள் என்றால் எங்களின் உண்மையான தாயார் இல்லாத குறையை நாங்கள் ஒருபோதும்

உணரவில்லை. மர்ஹூமாவுக்கும் ஒரு மகன் இருந்தார். ஆனால் 3 பிள்ளைகளிடமும் ஒருபோதும் வேறுபாடு காட்டியதில்லை. தன்னலமற்ற, தியாகம் மிக்க பெண்மணியாக இருந்தார்கள். இறை இருப்பின் மீது நம்பிக்கை, அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பு, மார்க்க போதனைகளுக்கு கீழ்ப்படிவது போன்றவற்றை அறிவுறுத்தி வந்தார்கள். எப்போதும் உறவுகளின் மேன்மை குறித்தும், இரத்த உறவுகளை பேணுவது குறித்தும் பாடம் நடத்துவார்கள். அல்லாஹ் அவர்களுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா, சுல்தான் அலி ரைஹான் சாஹிப் அவர்களுடையதாகும். UK–வின் தலைமையக அரபி Desk–ன் முரப்பியாகிய முஹம்மது அஹ்மத் நயீம் சாஹிப் அவர்களின் தந்தையாவார். மார்ச் 26 அன்று 83 வது வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

முஹம்மது அஹ்மது சாஹிப் எழுதுகிறார்: எங்களுடைய தந்தை சுயமாக ஆராய்ந்து 1958 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். அதன் பிறகு என்னுடைய தந்தைக்கு தப்லீக் செய்தார்கள்.

மாநாட்டிற்காக ரப்வாவிற்கு அனுப்பி வைத்தார்கள். ஓரிரு நூல்கள் படித்த பிறகு அவருடைய தந்தையும் அல்லாஹ்வின் அருளால் பைஅத் செய்து விட்டார்கள்.

பிறகு கூறுகிறார்: பைஅத் செய்த பிறகு இரு சகோதரர்களுக்கும் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. கொலை செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அல்லாஹ் பாதுகாத்தான். உங்களால் இரு சிறுவர்களை கொலை செய்ய இயலவில்லையே என மவ்லவிகள் ஊருக்கு வந்து கூறிச் செல்வார்கள். ஆனால் அல்லாஹ் தனது பாதுகாப்பை வழங்கி வந்தான். அவ்வாறு இருந்தும் கூட இவர்கள் தமது அஹ்மதியல்லாத உறவினர்கள் மற்றும் ஊராரிடம் இறுதி வரை உறவை பேணி வந்தார்கள். அவர்களின் எதிர்ப்பிற்குப் பிறகும் அவர்களுடன் நல்ல முறையில் பழகி வந்தார்கள்.

இவருக்கு 2 மகன்களும், 6 மகள்களும் உள்ளனர். அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

முஹம்மது அஹ்மது நயீம் சாஹிப் அவர்களும் தமது தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை.

பிறகு அடுத் ஜனாஸா ஜம்மு காஷ்மீர், ராஜோரி மாவட்டம், காலாபன் ஊரைச் சார்ந்த வாழ்வை அர்ப்பணித்த ஜமாஅத்தின் முபல்லிக் மவ்லவி குலாம் காதர் சாஹிப் அவர்களுடையதாகும். மார்ச் 26 அன்று தமது 56 ஆம் வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

மர்ஹூம் மவ்லவி குலாம் காதிர் சாஹிப் அவர்களின் குடும்பத்தில் அவருடைய பாட்டனார் மதிப்பிற்குரிய பஹாதுர் அலி சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 13 நபர்கள் அல்லாஹ்வின் அருளால் தற்போது ஜமாஅத்தின் தொண்டில் ஈடுபட்டுள்ளனர். முபல்லிக் ஆக 34 ஆண்டுகள் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்.

மர்ஹூம் எங்கெல்லாம் நியமிக்கப்பட்டார்களோ அங்கெல்லாம் முக மலர்ச்சியுடன், முழு உழைப்புடன், ஆர்வத்துடன் தஃலீம், தர்பிய்யத் பொறுப்புகளை இறுதி மூச்சு வரை நிறைவேற்றி வந்தார்கள். தப்லீக் செய்வதில் நல்ல திறமை பெற்றிருந்தார். தப்லீக் களத்தில் ஏற்படக்கூடிய துன்பங்கள் மற்றும் எதிர்ப்புகளை உறுதியாக நின்று எதிர்நோக்கக் கூடியவராக இருந்தார்கள். மிகவும் பொறுமையான, நன்றி கூறக்கூடிய, போதுமென்ற மனமுள்ள, துணிவுள்ள முபல்லிக் ஆக இருந்தார்கள். இவர் தமக்குப் பின்னால் மனைவி மட்டுமின்றி 3 மகன்களையும், 2 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். இவருடைய ஒரு மகன் பஷீருத்தீன் காதிர் என்பவர் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் இறுதி வகுப்பில் பயின்று வருகிறார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மஹ்மூதா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் காதியானின் தர்வேஷ் முஹம்மது சாதிக் சாஹிப் ஆரிஃப் அவர்களின் துணைவியவார். ஏப்ரல் 1 ஆம் தேதி 85 வது வயதில் இதயம் செயலிழந்ததன் காரணமாக வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

மர்ஹூமா அவர்கள் உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மெயின் பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் காஸி அஷ்ரஃப் அலி சாஹிப் அவர்களின் மகன்வழி பேத்தியாவார்கள். காஸி ஷாத் பக்ஷ் மர்ஹூம் அவர்களுடைய மகளாவார்கள். மர்ஹூமாவின் திருமணம் முஹம்மது ஆரிஃப் சாதிக் சாஹிப் தர்வேஷ் மர்ஹூம் அவர்களுடன் நடந்தது. மர்ஹூமா அவர்கள் தர்வேஷிய காலகட்டத்தை தமது கணவருடன் மிகவும் பொறுமையுடனும், நன்றியுடனும் கழித்தார்கள். பட்டினியுடன் இருக்க வேண்டிய நிலை வந்தபோதும் எப்போதும் பொறுமையை நிலைநாட்டினார்கள். வறுமையைக் குறித்து ஒருபோதும் எவரிடமும் கூறியதில்லை. தொழுகைகளை பேணக்கூடியவராக இருந்தார். எந்த அளவுக்கு என்றால், மரண நோயிலும் தொழுகைக்காக மிகவும் நிம்மதியிழந்தவராக காணப்பட்டார். திருக்குர்ஆன் ஓதுவதை மிகவும் பேணி செயல்பட்டு வந்தார்கள். முறையாக சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். இது குறித்து குழந்தைகளுக்கும் அறிவுரை கூறி வந்தார்கள். மர்ஹூமா மூஸியா ஆவார்கள் தமக்குப் பின்னால் 3 மகன்களையும், இரு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் இவர்களுடன் பாவ மன்னிப்பு மற்றும கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா உர்தனைச் சேர்ந்த காதில் சஅதுல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 60 ஆம் வயதில் வஃபாத் ஆகியுள்ளார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

இவர் தனது குடும்பத்தில் முதல் அஹ்மதியாவார். மிகவும் தூயவர். தொழுகைகளை பேணக் கூடியவர். சந்தாக்களை முறையாக செலுத்துபவர், ஜமாஅத் அமைப்புகக்கு முறையாக கட்டுப்படக் கூடியவராக திகழ்ந்தார். மிகவும் நல்ல பண்புகளை கொண்டவர், விருந்தோம்பல் செய்யக்கூடியவர், எளிதாக பழகக் கூடியவர் ஆவார்.

மிகவும் சாந்தமான மனிதர், மிகக் குறைவாக பேசக் கூடியவர் ஆவார். காலத்தின் கலீஃபாவின் விஷயத்தை இவர் தீர்ப்பாக கருதி வந்தார். MTA–வில் குறிப்பாக ஜுமுஆ குத்பாவில் முறையாக பார்த்து வந்தார். அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா ரப்வா தாருல் ஃபஸலைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது முனீர் சாஹிப் அவர்களுடையதாகும். ஏப்ரல் 1 ஆம் தேதி 73 வது வயதில் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

1972 ஆம் ஆண்டில் இவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். இவருடைய குடும்பத்தார் அஹ்மதி கிடையாது. ஆகவே அஹ்மதிய்யத்தை விட்டுவிடும்படி அவர்கள் இவரை பலமுறை

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 13 May 2021 Issue No. 19

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


தொல்லைகள் செய்துள்ளார்கள். எந்த அளவுக்கு என்றால் நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டுவிட்டால் நாங்கள் எந்த அளவுக்கு உங்களுக்கு வழங்குவோம் என்றால் உங்களுடைய பிள்ளைகளுக்குக் கூட சம்பாதிக்க வேண்டிய தேவை ஏற்படாது என 2003ல் ஒரு Offer–ஐயும் இவருக்கு வழங்கியுள்ளார்கள். ஆனால் இவர் அஹ்மதிய்யத்தில் நிலைபெற்றுள்ளார்.

மர்ஹூமின் மகள் இங்கு வாழ்வை அர்ப்பணித் இஸ்லாமாபாதைச் சேர்ந்த நமது பணியாளர் ஒருவரின் மனைவியாவார். தாஹிர் வகாஸ் என்ற ஒரு மகன் உள்ளார். அவரும் வாழ்வை அர்ப்பணித்தவராவார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

மிகவும் நல்ல, தூய மனிதராவார். எப்போதும் மலர்ந்த முகத்துடன் காணப்படுவார். எப்போதும் எந்த விஷயத்திற்காகவும் கோபப்படமாட்டார். ஐவேளை தொழுகையை பேணக் கூடியவராகவும், குறித்த நேரத்தில் சந்தாவை செலுத்தக் கூடியவராகவும் இருந்தார்.

அவருடைய உறவினர் ஹாபிஸ் சயீதுர் ரஹ்மான் சாஹிப் கூறுகிறார்: என்னுடைய தந்தை அவருக்கு வேலையை கற்றுக் கொடுத்தார். ஏனென்றால், அஹ்மதிய்யலாத உறவினர்கள் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை. ஆகவே அருகில் கடை வைத்திருந்த இவருடைய தந்தையிடம் அவர் வந்து விட்டார். தம்முடைய கடையில் அவருக்கு வேலையை கற்றுக் கொடுத்தார். பிறகு இவருடைய வீட்டிலேயே தங்கிக் கொண்டார்.

உறவினர் கூறுகிறார்: மிகவும் முறையாக தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் செல்வார். முன் வரிசையில் அமரக் கூடியவராக இருந்தார். பிறகு தப்லீக்கில் எந்த அளவு ஆர்வம் தோன்றியது என்றால் தமது மனைவியுடன் ரப்வாவுக்கு அருகில் கிராமங்களுக்கு தப்லீக்கிற்காக புறப்பட்டுச் செல்வார். அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா, ரப்வா தாருல் ஹிஜ்ரத்தைச் சேர்ந்த மாஸ்டர் நதீர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். ஏப்ரல் 4 ஆம் தேதி தமது 80 ஆம் வயதில் அன்னார் வஃபாத் ஆகியுள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவருடைய குடும்பத்தில் இவருடைய தந்தை மியான் உமர் தீன் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. அவர் சியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்த தாதா ஸைதைச் சேர்ந்த மியான் கரம் தீன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 15 வயதில் இவர் நேர்வழி கிடைக்கப் பெற்றவர். 1914 அல்லது 1915 ஆம் ஆண்டு மாநாட்டில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். கனவின் மூலமாக இவருக்கு வழிகாட்டப்பட்டிருந்தது.

பிறகு மாஸ்டர் நஸீர் சாஹிப் அவர்கள் சர்கோதாவில் 1999 ல் வட பகுதியில் வசித்தபோது, பள்ளிக் கூடத்தின் ஆசிரியர்கள் சார்பாக அன்னார் புறக்கணிக்கப்பட்டார்கள். அதே பள்ளிக் கூடத்தில் அவருடைய 9 வயது மகன் நஸீர் அஹ்மது சாஹிபை ஒரு மாணவன் கத்தியினால் தாக்கி காயப்படுத்தினான். மாஸ்டர் சாஹிப் அவர்கள் மிகப் பொறுமையுடன் நடந்து கொண்டார்கள். தாக்கப்பட்டபோது அந்த சிறுவன் உயிர் பிழைத்துக் கொண்டார். ஆனால் கொஞ்ச காலம் கழிந்த பிறகு காய்ச்சலின் காரணமாக அச்சிறுவன் இறந்து விட்டான்.

அந்த மகனுடன் உடலை கபரில் இறக்கும்போது, மிக பொறுமையுடனும், துணிவுடனும் மகனைப் பார்த்து, மகனே! நீ உனது உடம்பில் ஜமாஅத்தின் உண்மைக்கான அடையாளத்தை உடன் கொண்டு செல்கிறாய். அதில் எனக்கு பெருமிதம் என்று கூறினார்கள். இவர் அந்த ஊரில் ஆசிரியராக இருந்தவரை எந்தவொரு முஅல்லிம், முரப்பியின் அவசியம் ஏற்படவில்லை. அந்த கடமையையும் இவரே நிறைவேற்றி வந்தார்கள். பிறகு ரப்வாவுக்கு அருகில் இவரது பணிமாற்றம் ஆனது. ஆகவே ரப்வாவுக்கு இடம் பெயர்ந்தார்கள். பிறகு அங்கும் தொண்டாற்றி வந்தார்கள். எண்ணிலடங்கா சிறுவர், சிறுமிகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள்.

பணி ஓய்வு பெற்ற பிறகு காரி ஆஷிக் சாஹிப் அவர்களிடமிருந்து திருக்குர்ஆனை தெளிவான உச்சரிப்புடன் ஓதும் தர்தீலை கற்றுக் கொண்டார்கள். பிறகு வட்டாரத்தில் தர்தீலுல் குர்ஆனின் வகுப்புகளை எடுத்தார்கள். மெட்ரிக் தேர்ச்சி பெற்ற சிறுவர், சிறுமிகள் திருக்குர்ஆன் ஓதக் தெரியாதவர்களாக இருக்கக்கூடாது என முயற்சி செய்தார்கள். அவ்வாறு யாரேனும் இருப்பார்கள் என்றால் அவருடைய வீட்டுக்குச் சென்று திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பார்கள்.

மிகவும் சிறிய வயதிலிருந்தே தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார். கொரானாவின் காரணமாக அங்கு ரப்வாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும், வயோதிகர்களும் பள்ளிவாசலுக்கு வர வேண்டாம் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோது, மிகவும் முறையாக தமது வீட்டில் தொழுகையையும், ஜுமுஆக்களையும் தொழுது வந்தார்கள். ஒரு கனவில் அடிப்படையில் 80 வயதில் தாம் மரணிக்க இருப்பதாக உறுதியாக நம்பினார்கள். அவ்வாறே நடந்தது.

மர்ஹூமுக்கு 3 மகன்கள் உள்ளனர். 1 மகளும் உள்ளனர் என்று நினைக்கிறேன். எவ்வாறிருப்பினும் அவருடைய 3 மகன்களும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆவர். ஒருவர் இஸ்லாமாபாத்தில் தொண்டாற்றும் அஸீஸ் சாஹிப் ஆவார். இரண்டாமவர், ரப்வாவில் வசிக்கும் நமது ஜமாஅத்தின் முரப்பி நஸீம் அஹ்மத் சாஹிப் ஆவார். மூன்றாமவர் சயீத் அஹ்மத் அதீல் சாஹிப் ஆவார். இவரும் நைஜீரியாவில் முரப்பியாக உள்ளார். இவரும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்த அனைத்து உறவினர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. அவர்களின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

(மவ்லவி APA தாரிக் அஹ்மத் சாஹிப்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad